Sabaragamuwa Province/ Weekly School Department of Education

சப்ரகமுவ மாகாண கல்வித்திணைக்களம்
வாராந்த பாடசாலை

பாடம் : சித்திரம்

வாரம் : செப்டெம்பர் 03

தரம் : 09

தொகுப்பு : செல்வி.S.லுக்ஷனி
இ/நிவி/ஹவுப்பே த.வி

**தேர்ச்சி** : **வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டு சித்திரம், சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப்பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம்** : **தேசிய (உண்ணாட்டு) பாரம்பரிய அலங்கார வேலைப்பாடுகள் பற்றி அறிவார்.**

**செயற்பாடு** : **"பெண் உருவங்கள் அடங்கிய சிறப்பு வாய்ந்த பாரம்பரிய அலங்கார நிர்மாணிப்புக்கள்"**

**ஒப்படை** : **பின்வரும் வாசிப்புப் படிவத்தினை நன்கு வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.**

## வாசிப்புப் படிவம்

**அறிமுகம்**

பெண் உருவங்கள் அடங்கிய சிறப்பு வாய்ந்த பாரம்பரிய அலங்கார வடிவங்கள் பற்றிய தகவல்கள் மீது அவதானம் செலுத்தப்படுகின்றன. மிருகமொன்றின் இயல்பான தன்மை, பொருளொன்றின் இயல்பான வடிவம் என்பன பெண் உருவங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை பாரம்பரிய சுவரோவியம், செதுக்கல்களில் காணப்படுகின்றன.

**சதுர்நாரிப் பல்லாக்கு**



நான்கு பெண் உருவங்களை பல்லக்கின் வடிவமாக ஒருங்கிணைத்து செய்யப்பட்ட நிர்மாணிப்பு சதுர்நாரி பல்லக்காகும். தலதா மாளிகையில் மேல் மாடி உட்கூரையின் வலப்பக்கத்து செவ்வக வடிவ நிரலொன்றில் சதுர்நாரி பல்லக்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இரு பெண் உருவங்கள் கால்களை பிணைத்து கைகளை நீட்டியிருக்கும் விதத்தில் நிருபிக்கப்பட்டுள்ளது. பல்லக்கின் உள்ளே அதில் பயணிக்கும் தாமரை மலரை ஏந்திய தெய்வமொன்று அல்லது போதி சத்துவரைக் காணக்கூடியதாக உள்ளது.

**பஞ்சநாரி கலசம்**




ஐந்து பெண் உருவங்கள் குடத்தின் வடிவில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. பாரம்பரியக் கலைக் கைத்தொழில்களில் இவ்வடிவத்தை அதிகம் காணலாம். அத்துடன் யானைத்தந்த செதுக்கல்களிலும் இவ்வலங்கார வேலைப்பாட்டைக் காணலாம். பஞ்சநாரி கலசம் செழிப்பை அடையாளப்படுத்துவதாக இருந்திருக்கலா என பேராசிரியர் எதிரிவீர சரசந்திர கருத்துத் தெரிவித்துள்ளார். ரிதீ விகாரையின் கதவில் பொருத்தப்பட்டிருந்த யானைத்தந்தத்தில் செதுக்கப்பட்டிருந்த பஞ்சநாரி கலசம், உயர்வான வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. புழைமை வாய்ந்த மற்றும் சில விகாரைகளிலும் பஞ்சநாரி கலசம் ஓவியமாகவும் செதுக்கல் வடிவிலும் உள்ளது.

**சப்தநாரி பல்லக்கு**




ஏழு பெண் உருவங்கள் பல்லக்கு வடிவில் ஒருங்கிணைந்து இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தலதா மாளிகையின் வெளி மாடத்தில் இவ்வோவியத்தைக் காணலாம்.

**சப்தநாரி இரதம்**



ஏழு பெண் உருவங்களைக் கொண்ட நிர்மாணிக்கப்பட்ட இரதம் சப்தநாரி இரதம் எனப்படுகிறது. தலதா மாளிகையின் வெளிப்புற மாடத்தில் இவ்வோவியம் ஒன்றைக் காணலாம்.பெண்கள் இருவர் பின்புறமாக வளைந்து இரு பாதங்களையும் தொடும் விதத்தில் சில்லுகள் போன்று தோற்றமளிக்கின்றன. இரதத்தின் உச்சியில் கிரீடத்துடன் பெண் ஒருவர் சீன மலர் இரண்டினை நீட்டப்பட்ட கைகளில் ஏந்தியிருக்கும் விதம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இருதத்தின் மத்தியில் பத்தினி தெய்வம் காணப்படுகிறார். கண்டி தலதா மாளிகையின் ஓவியங்களுள் சப்தநாரி இரதம் காணப்படுகிறது.

**நவநாரி குஞ்சரம்**



நவநாரி குஞ்சரம் கண்டிக் காலத்து ஓவியங்களிலும் செதுக்கல்களிலும் காணக்கூடியதாக உள்ளது. ஒன்பது பெண் உருவங்களைக் கொண்டு தந்தமுள்ள யானையின் தோற்றத்தை வெளிப்படுத்துகின்ற அமைப்பு நவநாரி குஞ்சரம் எனப்படும். கண்டி தலதா மாளிகையின் வெளிப்புற மாட உற்கூரையில் குஞ்சரத்தின் ஓவியத்தைக் காணலாம்.

**நாரிலதா மலர்**



பாரம்பரிய அலங்கார வேலைப்பாடுகளில் நாரிலதா மலரை கொடிவலையாகக் காணலாம். அழகிய நாரிலதாவின் தேகத்தின் இடுப்புக்கு மேற்பட்ட பகுதி மலர்ந்த மலரொன்றாக நிர்மாணிக்கப -பட்டுள்ளது. வனவாசம் புரியும் முனிவர்களின் தியானம் கூட கலையக்கூடிய காந்த சக்தி உடையதாக இம்மலர் காணப்படுகின்றது. நாரிலதா மலரின் பெண் உருவம் விசித்திரமான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. பழைமையான விகாரை ஆலயங்களில் நாரிலதா மலருடனான பல ஓவியங்களைக் காணலாம். எம்பக்க தேவாலயத்தின் மரச் செதுக்கல்களில் நாரிலதா மலரின் செதுக்களைக் காணலாம். தலதா மாளிகையில் வரையப்பட்டுள்ள நாரிலதா மலர்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாக ஒருங்கிணைக்கப்ப -ட்டுள்ளமை சிறப்பானது.

**பயிற்சி : வாசிப்புப் படிவத்தின் துணையுடன் அட்டவணையை நிரப்புக.**

01.

| அலங்கார வேலைப்பாடு | நிரூபணமாகும் வடிவம் | ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பெண் உருவங்களின் எண்ணிக்கை | காணப்படும் இடங்கள் |
|---|---|---|---|
| | | | |

02. வாசிப்பு படிவத்தினை நன்கு வாசித்து முக்கிய குறிப்புகளை உங்களது பயிற்சிக் கொப்பியில் எழுதிக் கொள்க.